**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**STC No.339/2022 Date:30-05-2024**

வா.சா.1 – பிரபாகரன், த/பெ.செங்கோட்டையன்,

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

1) எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நண்பர் மூலமாக தெரியும். அந்த நண்பரின் பெயர் என்ன என்றால் பிரபு ஆகும். எதிரியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் பணம் கொடுப்பதற்கு முன்னதாக 1 வருடங்களாக பழக்கம். எதிரியை எனக்கு தெரியும் என்ற விவரத்தை புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு விவசாயம் தவிர வேறு ஏதாவது தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை.

2) நான் விவசாயம் தான் செய்து வருகிறேன் என்பதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு நான் எப்போது கடன் கொடுத்தேன் என்றால் 26-09-2021 ம் தேதி ஆகும். எதிரிக்கு கடனை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் வீட்டில் வந்து வாங்கினார். யார் வீட்டில் வந்து எதிரி கடனை வாங்கினார் என்றால் எனது வீட்டில் வந்து வாங்கினார். எதிரி எனது வீட்டில் வந்து தான் கடன் வாங்கினார் என்று புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3) நான் எதிரிக்கு கடன் கொடுத்தபோது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நானும், எதிரியும் மட்டும் தான் இருந்தோம். எதன் அடிப்படையில் நான் எதிரிக்கு கடன் கொடுத்தேன் என்றால் கைமாற்று கடனாக எதிரி ஏற்கனவே என்னிடம் கடன் வாங்கியிருந்ததால் அதன் அடிப்படையில் கொடுத்தேன். எதிரி எந்தெந்த தேதியில், எவ்வளவு தொகை அவ்வாறு கைமாற்று கடனாக வாங்கினார் என்றால் சில்லரை கடன்களாக வாங்கியிருந்ததால் ஞாபகமில்லை. எதிரிக்கு நான் இந்த வழக்கில் கடன் கொடுத்த தேதியில் இருந்து 2-3 வருடங்களுக்கு முன்னதாக நான் அந்த சில்லரை கடன்களை கொடுத்திருப்பேனா என்றால் இல்லை, 26-09-2021 ம் தேதிக்கு முன்னதாக உள்ள 6 மாதத்திற்குள் அவ்வாறு கடன் கொடுத்திருப்பேன்.

4) எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் அரசு பள்ளி ஆசிரியராக பணி செய்து வருகிறார். எதிரி எந்த கிரேடில் வேலை செய்து வருகிறார் என்றால் 10-12 ம்

வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு ஆசிரியராக இருக்கலாம். எதிரிக்கு சொந்தமாக வீடு, நிலம் உள்ளதா என்றால் வீடு உள்ளது. நான் எத்தனை முறை எதிரிக்கு கைமாற்று கடன் கொடுத்துள்ளேன் என்றால் இந்த வழக்கு கடனை தவிர 2-3 தடவை கொடுத்திருப்பேன். எதிரி என்னிடம் அவ்வாறு வாங்கிய 2-3 கைமாற்று கடன்களுக்கு ஆவணங்கள் ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. அந்த 2-3 கைமாற்று கடன்களை எதிரி திருப்பி செலுத்திவிட்டாரா என்றால செலுத்திவிட்டார். அந்த 2-3 கைமாற்று கடன்களை எதிரி என்னிடம் என்ன காரணம் கேட்டு வாங்கினார் என்றால் அவசர தேவைக்காக என்று கூறி வாங்கினார்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய நேரம் கேட்டதால் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).**

Witness (Sd)-Prabakaran

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.